# தேசிய கல்வி நிறுவகம்

## விசேட கல்வி தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி – 2020

### விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வி நிறுவக உட்படுத்தற் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**கற்கைநெறியின் இயல்பு :**
பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடலியற் குறைபாடு, மந்தநிலை, ஒட்டிசம் நிலை, வேறு கற்றல் குறைபாடுகளால் ஏற்படுகின்ற கற்றல் பிரச்சினைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகளை எதிர்நோக்கும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் பகுதி நேரக் கற்கைநெறியாகும். தேசிய கல்வி நிறுவகத்தில் விரிவுரைகளும், தெரிவு செய்யப்பட்ட விசேட பாடசாலைகளில் செய்முறை அமர்வுகளும் நடைபெறும். உயர் கல்வி அமைச்சினால் பாடநெறி தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தராதர நியமங்களின் அடிப்படையில்(Sri Lanka Qualifications Framework) இக் கற்கைநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

2019.10.31 அன்று 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.

**க.பொ.த (உ/த)** சித்தியடைந்து இருத்தல்.

**அத்துடன்**

அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலையொன்றில் அல்லது பிரிவேனா ஒன்றில் ஆசிரியராக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வியற் கல்லூரியொன்றில் அல்லது ஆசிரியர் கலாசாலையொன்றில் கல்வியியலாளராக இருத்தல்.

**அல்லது**

இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளவராக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வியியல் அதிகாரி அல்லது விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது நிறுவனத்தில் கடமையாற்றுபவராக இருத்தல்.

**கற்கைநெறிக்குப் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படும் விதம்** :

நேர்முகப் பரீட்சையினூடாகப் கற்கைநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கைநெறிக் கட்டணம் விபரம்:**

| | |
|---|---|
| **விண்ணப்பப்படிவக் கட்டணம்** | **ரூபா 200.00** |
| **பதிவுக் கட்டணம்** | **ரூபா 1000.00** |
| **கற்கைநெறிக்கட்டணம்** | **ரூபா 30000.00** |

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தயாரித்த படிவத்துடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 607628 ஆம் இலக்க மகரகம இலங்கை வங்கிக் கணக்கிற்கு அல்லது ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 200/- செலுத்திய பற்றுச்சீட்டுடன் **பணிப்பாளர், உட்படுத்தற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசுக் கட்டளையுடன் அனுப்பும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"விசேட கல்வி டிப்ளோமா பாடநெறி – 2020"** எனக் குறிப்பிடுக.)
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : **2019.10.31**

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம.**
2019.09.11

## தேசிய கல்வி நிறுவகம்

### மகரகம

# விசேட கல்வி டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பப்படிவம் - 2020

1. முழுப் பெயர் : ……………………………..
2. முதல் எழுத்துடன் பெயர் : ……………………………..
3. தனிப்பட்ட முகவரி : ……………………………..
4. முகவரி (தொழில் புரியும் இடம் / நிறுவனம்) : ……………………………..
5. மொழி மூலம் : ……………………………..
6. அடையாள அட்டை இலக்கம் : ……………………………..
7. பிறந்த திகதி : ……………………………..
8. 2019.10.31 ஆந் திகதியில் வயது : ……………………………..
9. தொழில் : ……………………………..
10. தொலைபேசி இலக்கம் : ……………………………..
    (கையடக்கத் தொலைபேசி)
11. கல்வித் தகைமை

| க.பொ.த(உ.த) வருடம் | | க.பொ.த (சா.த) வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| | | | |

12. தொழில் தகைமை : ……………………………………………………………

13. வேறு தகைமைகள் : ……………………………………………………………

மேலே தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

…………………………………. திகதி: …………
விண்ணப்பதாரியின் கையொப்பம்